.செ.வெ.எண்:40 நாள்:24.02.2017

# அரியலூரில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியை திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.02.2017) திறந்துவைத்தார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் பேருந்து நிலையத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (24.02.2017) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்களும் புகைப்படக்கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார்.

இப்புகைப்படக்கண்காட்சியில், தமிழ்நாடு அரசின் சிறப்புத்திட்டங்களான விலையில்லா வெள்ளாடுகள், கறவைப்பசுக்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, விவசாய கடன் தள்ளுபடி வழங்குதல் போன்ற நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்ச்சிகள், விரைவு பட்டா மாறுதல் முகாம் மூலமாக பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக இக்காண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.லோகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி.பத்மஜாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கதிரேசன், அரியலூர் நகராட்சி ஆணையர் திரு.வினோத், அரியலூர் வட்டாட்சியர் திரு.முத்துகிருஷ்ணன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ச.நந்தகுமார் அனைவரையும் வரவேற்றார். உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) க.சரவணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) சிவக்குமார் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகப்பணியாளர்கள், அரசு அலுவலர்கள், காவல்துறையினர், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**